O.S. No.21/2019

04.04.2025

வா.சா. 5

திரு ராமச்சந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடைசியாக திருவள்ளூர் மாவட்டம், ஆட்டந்தாங்கல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். 1987 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். ராஜேந்திரன் மற்றும் வீரசிங்கத்தின் சொத்திற்கான உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. உயில் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. ஆனால், 100 ரூபாய் பத்திரமாக இருக்கலாம். அந்த உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான். உயில் தஞ்சாவூர் கீழவாசலில் வழக்கறிஞர் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. சாட்சி பின்னிட்டு வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது என கூறுகிறார். அந்த உயில்

பெத்தையன் என்பவரால் எழுதப்பட்டது. உயிலில் முதல் சாட்சியாக பஞ்சவர்ணம் என்பவர் போட்டார். 2-வது சாட்சியாக பெத்தையன் என்பவரால் எழுதியது உட்பட என கையெழுத்து போட்டார். உயில் எழுதப்பட்டபோது நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் இருந்தேன். வா.சா.ஆ.2 ல் சாட்சி கையொப்பமோ வேறு எந்த கையொப்பமோ செய்யவில்லை என்றால் சரிதான். உயிலில் கண்ணம்மாளுக்கு A ஷெட்டியூல் சொத்து எனவும் B ஷெட்டியூல் சொத்து கண்ணம்மாளின் கணவர் ரெகுநாத தேவர் சொத்து எனவும் அவர் இறந்ததால் அவருடைய மனைவி கண்ணம்மாளும் கண்ணம்மாளின் மகள் நவநீதமும் சரிபாதியாக அந்த சொத்தை அனுபவிக்க வேண்டும். கண்ணம்மாள், நவநீதம் இறந்த பிறகு A ஷெட்டியூல், B ஷெட்டியூல் சொத்துக்களை வாதியும் பிரதிவாதியும் சரிபாதியாக அனுபவித்து வர வேண்டும். நான் தற்போது வாதி, பிரதிவாதி வசிக்கும் செருமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். உயிலில் கண்ட சொத்து விபரம் தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். உயிலில் காணப்பட்டுள்ள A ஷெட்டியூல், B ஷெட்டியூல் சொத்துக்களின் புல எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கண்ணம்மாள், நவநீதம் அம்மாள் இருவருக்கும் செருமங்கலம் கிராமம்தான் வசிப்பிடம் என்றால் சரிதான். ஏன் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றீர்கள் என்றால் கண்ணம்மாளின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் சொத்துபற்றி ஏற்பாடு செய்ய

வேண்டும் என்ற காரணத்தால் உயில் எழுதிவைக்க சொல்லி என்னிடம் கேட்டார். நான் கிராம நிர்வாக அலுவலராக தஞ்சாவூரில் பணிபுரிந்ததால் கண்ணம்மாள், நவநீதம் அம்மாள் இருவரையும் தஞ்சாவூர் அழைத்து சென்று உயிலை தயார் செய்ய சொன்னேன். உயில் எழுதிய பிறகு உயிலில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து கண்ணம்மாளின் இறப்பிற்கு பின் நவநீதம் அம்மாள் வேறு யாருக்காவது விற்பனை செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. உயிலில் கண்டுள்ள சொத்துக்களை நவநீதம் அம்மாள் வேறு ஒரு நபருக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் எழுதி வைத்துள்ளதை தெரிந்து கொண்டு வாதிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. உயிலில் கண்டுள்ள ஷரத்துக்களும் விபரங்களும் எனக்கு நேரடியாக தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.04.04 16:07:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.